[6th March 1968

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சென்றவாரம் ஞாயிற்றுக்கிழமையன்று, மவுண்ட் ரோட்டில் "சபையர்" தியேட்டரில் "முகம்மது பின் துக்ளக்" என்ற நாடகம் நடந்ததைப் பார்க்க நண்பர் ஒருவர் என்னைக் கூட்டிக்கொண்டு போனார். அதிலே அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்றும், எந்த கவர்ன்மெண்ட் பதவிக்கு வந்தாலும் சுய நலத்தை முன்னிட்டுத் தான் நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்ற கருத்தையும் மக்களிடையே பரப்பும் நிலையில், அந்த நாடகம் நடத்தப்படுகிறது. அதைச் சர்க்கார் கவனித்துத் தடுக்க முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "முகமது பின் துக்ளக்" என்ற நாடகத்தின் விளம்பரத்தைப் பார்த்தால் அது சரித்திர நாடகம் போலத் தோன்றியது. கனம் உறுப்பினர் அந்த நாடகத்தில் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் அயோக்கியர்கள் என்று சொல்வதாகக் கூறினார். காலையில் கீழ் சபையில் சொல்லும்போது, எல்லோரையும் முட்டாள் என்று சொல்லிவிட்டு, நடிக்கிற தன்னையே முட்டாள் என்று சொல்லிக்கொள்வதாகச் சொன்னார்கள். ஆகவே, அப்படி கேலிக்காக கூட குறிப்பிடும் வாசகமாக இருக்கலாம். அதைப் பற்றி ஆராய்ந்த பிறகு தான் சொல்லப்படவேண்டும்.

Misappropriation of funds

* 182 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether anybody misappropriated Rs. 5,050 in the Police Department in Madurai recently ; and

(*b*) if so, the action taken thereon ?

நிதி கையாடல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமீபத்தில் மதுரை போலீஸ் இலாகாவில் யாராவது ரூ. 5,050 கையாடல் செய்தாரா ?

(இ) ஆமெனில் அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட கருவூல நேர்முக சேவகர் வேலையிலிருந்து தள்ளப்பட்டார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, வேலையிலிருந்து தள்ளப்பட்டது சரி, பணத்தை வசூல் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இத்தகைய எண்ணங்கள் அந்த இலாகாவில் வேலை செய்பவர்களுக்கு வரக் காரணமென்ன ? அதைத் தடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த இலாகாவில் புதிதாக வந்த கருவூல நேர்முக சேவகர் (Lance Nayak) பெரிய கருப்பண்ணன் என்பவருக்குப் பயிற்சியளிக்க, அங்கேயிருந்த பழைய ஆள் ராஜி என்பவர் அமர்த்தப்பட்டார். அது எப்படிப்பட்ட பயிற்சி என்றால், கருவூலத்திற்குச் சென்று பணங்களை மாற்றுவதும், பாங்கிற்கு சென்று பணங்களை மாற்று வதற்கும் ஆக போலீஸ் இலாகாவிலிருந்து அனுப்புவதாகும். அப்படி அனுப்பப்பட்ட பெரிய கருப்பண்ணனுக்கு இந்த ராஜு ஒத்தாசையாக இருந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இருவரும் சென்று கருவூலத்தில்

பணத்தை 32,324 ரூபாய்க்கு மாற்றினார்கள். அதிலே ராஜு என்பவர் பெரிய கருப்பண்ணனை ஏமாற்றி 27,274 ரூபாயை மாத்திரம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு 5,050 ரூபாயை சுருட்டிக்கொண்டார். அதற்குப் பிறகு இந்த ராஜு செய்த குற்றத்திற்காக, பயிற்சி பெற்று கொண்டிருந்த பெரிய கருப்பண்ணன் 5,050 ரூபாயை கட்டவேண்டிய நிலை ஏற்பட்டு அவரும் கட்டி விட்டார். அதற்குப் பிறகு ராஜு மீது பெரிய கருப்பண்ணன் வழக்குப் போட்டு, அந்த ராஜு தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு பணத்தைப் கொடுத்துவிட்டார். இப்படிப்பட்டவர்கள் இருக்கலாமா என்று நண்பர் தியாகராஜன் கேட்டார். இந்த ராஜு என்பவர் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதியன்று போலீஸ் கான்ஸ்டேபிள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். அவருடைய பழைய வரலாற்றை இப்போது பார்த்தால், அவர் திருட்டுகள், கையாடல்கள் முதலியவற்றில் திறமைசாலியாக இருந்திருக்கிறார் என்பது பிறகு தான் தெரியவந்தது.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இந்த தவறுக்காக யார் யார் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அம்மாதிரி செய்த ராஜு வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பெரிய கருப்பண்ணன் இந்த, குறிப்பிட்ட பில்லை மாற்ற அலுவலகத்திற்குச் செல்லத் தவறியதற்காக, அவருடைய ஊதியத்தில் இரண்டு வருடத்திற்கான படிகள் குறைக்கப்பட்டன. ராஜு வேலைக்கு வருவதற்கு முன்னால், அவருடைய நடத்தையைப் பற்றி விசாரித்து தகவல் அறிவித்த சப் இன்ஸ்பெக்டர், தவறான அறிக்கையை கொடுத்ததற்காக அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மதுரை மாவட்ட அர்பன் அலுவலக மானேஜரும், அக்கவுண்டண்டும் நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

Saraswathi Mahal, Thanjavur

* 183 *Q.*—**THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—**

(*a*) the number of books and manuscripts available in Saraswathi Mahal, Thanjavur ;

(*b*) the books available on medicine and home science ;

(*c*) the number of books that can be prescribed as text-books in schools ; and

(*d*) whether there is any proposal to prescribe them as text books in schools ?

சரஸ்வதி மகால், தஞ்சாவூர்.

திரு. என். ஆர். தியாகரராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை சரஸ்வதி மகாலில் மொத்தம் எத்தனை புத்தகங்கள் ஏடுகள் இருக்கின்றன ?

(இ) வைத்தியம், மனை இயல் பற்றி என்ன புத்தகங்கள் உள்ளன ?

(உ) பள்ளிபாட புத்தகங்களாக வைக்கத் தகுதி வாய்ந்தவை எத்தனை?

(எ) அவற்றைப் பாட புத்தமாக வைக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) சுமார் 2,000 அச்சிட்ட புத்தகங்களும், சுமார் 40,000 கையெழுத்துச் சுவடிகளும் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ளன.